மனித
# உரிமைகள் மீட்பு
மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 12 செப்டம்பர் 16 - 30 | 2023 விலை 20 / -

## பாசிச ஆர்.எஸ். எஸ் ஆக மாறுகிறது திமுக




தமிழ்நாடு சுடுகடாக மாறுகிறது!

நேர்மையான அதிகாரிகள் ரப்பர் ஸ்டாம்ப் அதிகாரிகளாக மாறியதால் இந்த நிலை...

சட்ட - ஒழுங்கு சீரழிந்து விட்டது.



## கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையின் இதயத்தில் இடம்பெற்ற இருதய ராஜன் !



## தஞ்சாவூர் மாவட்டத்தில் மனல் மாஃபியாவிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு வஞ்சம் தீர்த்த RI தீபா, VAO ராஜமாணிக்கம்

## ஆசிரியர் பக்கம்




**தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் ஏரிப்புறக்கரை கிராமம் திமுக கட்சி நிர்வாகிகளும் காவல்துறையும் அரசு அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து இஸ்லாமியர்கள் வீட்டை இடித்தது, திருப்பூர், பல்லடத்துக்கு அருகேயுள்ள கள்ளக்கிணறு பகுதியில் நான்கு குடும்ப உறுப்பினர்கள் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்ட அன்றைய தினம் மட்டுமே தமிழகத்தில் ஒன்பது கொலைகள் நடந்திருக்கின்றன. பட்டப்பகலில் கொலைசெய்கிறார்கள்.**

வீட்டின் கதவை உடைத்து கத்திமுனையில் கொள்ளையடிக்கிறார்கள்.

சமீபகாலமாக, குற்றச் செயல்களின் எண்ணிக்கை தமிழகத்தில் தாறுமாறாக அதிகரித்திருக்கிறது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும், தமிழகம் தழுவிய அளவில் 20 பேர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருக் கிறார்கள்.

கடந்த செப்டம்பர் 10ம் தேதி, ஒரே நாள் இரவில் சென்னையில் இரண்டு பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

ஈரோடு அருகே வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த வயதான தம்பதி கொல்லப் பட்டதில் தொடங்கி, திருமழிசையில் ரௌடி எபினேசர் கொல்லப்பட்டது.

எங்கு பார்த்தாலும் ரத்தக்கறையாகக் காட்சியளிக்கிறது தமிழகம்.

ரௌடிகளுக்குள் நடக்கும் 'கேங் வாரில்' நாட்டு வெடிகுண்டுகள் மிகச் சாதாரணமாகப் பயன்படுத்தும் கலாசாரம் அதிகரித்திருக்கிறது. வழிப்பறி, கொள்ளைச் சம்பவங்களில் எந்தவித அச்சமும் இல்லாமல் ஈடுபட்டுவருகிறார்கள்.

சிவகங்கை மாவட்டம், வீரவலசை கிராமம் அருகே அரசுப் பேருந்தை வழிமறித்த மர்ம நபர்கள், அரிவாளைக் காட்டி மிரட்டி நடத்துனரிடம் இருந்த பணப்பையைப் பறித்துச் சென்றிருக்கிறார்கள்.

பணியின்போது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி, சிவகங்கையில் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

போக்குவரத்துத்துறை ஊழியர்கள். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கட்டுப் பாட்டுக்குள் இருப்பதாகக் காவல்துறை மார்தட்டிக்கொள்கிறது.

ஆனால், நடக்கும் சம்பவங்கள் எல்லாமே, 'குற்றம் செய்பவர்களுக்குக் காவல்துறைமீது துளியும் அச்சம் இல்லை' என்பதையே உணர்த்துகின்றன.

"என்னாச்சு சட்டம் ஒழுங்கு... என்ன செய்கிறது காவல்துறை?" என்று கேட்கிறார்கள் மக்கள்.

**- ஆசிரியர் நீலகிரி K. மதுசூதனன்**

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-12 செப்டம்பர் 16-30 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.

**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.

**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.

**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.

**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஓசூர்).

**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

## முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**
**-ஆசிரியர்**



# காவல்துறையா? அல்லது ஜாதிதுறையா?

## தேனி மாவட்டத்தில் தலைவிரித்து ஆடும் ஜாதி பாகுபாடு...

**நாளிதழுக்கு பேட்டி கொடுத்ததால் ஆயுதப்படைக்கு மாற்றம்.**

தேனி பெண் போலீஸ் தேனி மாவட்டம் பெரியகுளம் போலீஸ் நிலையத்தில் பணியாற்றும் பெண் காவலர் கவிதா போலீஸ் பேசுவதாக ஒரு ஆடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அந்த ஆடியோவில் அந்த பெண் போலீஸ் கூறியிருப்பதாவது: எனக்கு 29.7.2020ல் ஓடைப்பட்டி போலீஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் பணியில் இருக்கும் போது விபத்து ஏற்பட்டது.

விபத்து நடந்து 3 ஆண்டுகள் ஆகியும் எனக்கு முதல் தகவல் அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. காவல் துறை வேலை பார்க்கும் எனக்க இந்த நிலை என்றால் பொது மக்கள் நினைத்து பார்க்க வேண்டாம்.

பிறகு நான் நாமக்கல் ஆஞ்சநேயர் கோவிலில் சிறப்பு பூஜை நானும், எனது உடைந்த காலை வைத்துக் கொண்டு பலமுறை மனு கொடுத்துள்ளேன். இதுவரை எனக்கு விபத்து காப்பீட்டுக்குரிய எந்த நிதிஉதவியும் கிடைக்கவில்லை. நான் பலமுறை முயற்சி செய்தும் தோல்வி தான் அடைந்து வருகிறேன். கோவை சரக டி.ஐ.ஜி.யாக பணியாற்றி வந்த விஜயகுமார் கடந்த ஜூலை-7ந்தேதி அதிகாலையில் தற்கொலை



**கடிதம் எழுதிவிட்டு தற்கொலை செய்துகொண்ட காவலர்**

மருத்துவ விடுப்பில் வீட்டுக்கு வந்த இளம் காவலர் தனது அம்மாவுக்கு உருக்கமாக கடிதம் எழுதிவிட்டு தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே ஊஞ்சக்காடு பகுதியை சேர்ந்தவர் அன்புராஜ். 22 வயதான இவர், சென்னை ஆவடியில் உள்ள ஆயுதப்படை சிறப்பு காவல் பிரிவில் பணியாற்றினார். இந்நிலையில், நேற்று வீட்டில் காவலர் தற்கொலை செய்து கொண்டார். இறக்கும் முன் தன் அம்மாவுக்கு அன்புராஜ் எழுதிய கடிதத்தை போலீஸார் கைப்பற்றினர். அந்த கடிதத்தில், “போகிறேன் அம்மா, நான் இத்தனை நாள் வாழ்ந்ததே உனக்காகத்தான்" என்று

செய்து கொண்ட சம்பவம் இன்னும் மறையவில்லை. என்னையும் தற்கொலைக்கு தூண்டும் அளவுக்கு என் மீதும் பல புகார் சமர்ப்பித்து என்னை தற்கொலை செய்ய பெரியகுளம் காவல் துறையின் ஆய்வாளர் மீனாட்சி காவல் துறை துனை கண்காணிப்பார் கீதா அவர்களும் தூண்டுகிறார்கள்.






எனக்கு ஒரு பெண் குழந்தை, ஒரு ஆண் குழந்தை உள்ளது. அவர்களை வைத்துக் கொண்டு நான் பெரும் கஷ்டப்பட்டு வருகிறேன். எனக்கு வந்த அவல நிலை இனி எந்த காவலருக்கும் வரக்கூடாது. என்பதற்காக இதை முதல் அமைச்சருக்கு சமர்ப்பிக்கிறேன். மேலும், வார விடுமுறையும் கிடைப்பது இல்லை. தற்செயல் விடுப்பும் கிடைப்பது இல்லை. இவ்வாறு அந்த ஆடியோவில் பேசி இருக்கிறார். சர்ச்சை தகவல் மேலும் அந்த ஆடியோவில், டி.ஐ.ஜி. விஜயகுமார் தற்கொலை தொடர்பாக சர்ச்சைக்குரிய தகவலையும் சொல்லி இருக்கிறார். இது போலீசார் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து போலீஸ் அதிகாரிகளிடம் கேட்டபோது, 'சம்பந்தப்பட்ட பெண் காவலர் கடந்த 5,6ந்தேதிகளில் பணிக்கு வரவில்லை. தன்னிச்சையாக விடுப்பு எடுத்தது.

உள்ளார் என்று கூறினார்மேலும் காவலர் கவிதா அவர்கள் உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியதின் பேரில் அவரை அன்றே அவரை ஆயுதபடுத்தி மாற்றப்பட்டுள்ளார்கள்



பெரியகுளம் காவல்துறை ஆய்வாளர் மீனாட்சி



தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்



பெரியகுளம் மாவட்ட துணை கண்காணிப்பாளர் கீதா

அவர்கள் ஆயுதப்படைக்கு வேலைக்கு சென்றால் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் அனுமதி பெற்று வரவும் என்று சொல்லிவிடுகிறார்கள் பிறகு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றாள் ஆயுதபடைக்கு செல்லுங்கள் என்று சொல்கிறார்கள்

இது சம்பந்தமா காவலர் கவிதாவிடம் கேட்டபோது காவல்துறை மீது எந்த தவறும் கிடையாது நான் பட்டியல் இனத்தில் பிறந்தது தான் தப்பு இதை நான் உயர்ந்த சமுதாயத்தில் பிறந்திருந்தால் நான். உதவிஆய்வாளராக பதவியில் இருந்திருப்பேன்என்ன கண்ணீர் உடன் முடித்துக் கொண்டார்இது சம்பந்தமாக மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தில் நிர்வாகிகள் கேட்டபோது தேனி மாவட்டத்தை பொறுத்தவரையிலும் உயர்ந்த சமுதாயத்தில் பிறந்த ஒரு காவலராக இருந்தாலும் அவர் தான் தேனி மாவட்ட காவல் அதிகாரி என முடித்துக் கொண்டார்

தமிழக மக்களுக்கு கோயம்புத்தூர் DIG விஜயகுமார் IPS மரணத்திலிருந்து தலை நிமிரவில்லை மீண்டும் ஒரு தலைகுனிவு ஒன்று வரக்கூடாது

தமிழக மக்களுக்கு நல்லது தமிழக அரசுக்கு நல்லது

**- சிறப்பு உதவி ஆசிரியர் தேனி AR நாசர்கான்**



# திருப்பூர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் வெட்டிக் கொலை...

## திருப்பூர் அருகே கொடூரம்!

**பல்லடம் அருகே மது அருந்தியதை தட்டிக்கேட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரை ஒரு கும்பல் வெட்டிக்கொலை செய்தது. இதில் தொடர்புடைய குற்றவாளிகளைப் பிடிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன.**

பிரேதப் பரிசோதனை இன்று நடைபெற உள்ள நிலையில் 500க்கும் மேற்பட்ட போலீஸார் பல்லடம் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர். மேற்கு மண்டல ஐஜி பவானிஸ்வரி மருத்துவமனையில் உள்ளார்.

நடந்தது என்ன? திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள கள்ளக்கிணறு கிராமத்தைச் சேர்ந்தவர் செந்தில்குமார் (47). இவர் தவிடு புண்ணாக்கு வியாபாரம் செய்து வந்தார். இந்நிலையில் நேற்று இரவு இவரது வீட்டின் அருகே 3 பேர் கொண்ட கும்பல் மது அருந்தியதாகக் கூறப்படுகிறது.

இதனை செந்தில்குமார் தட்டிக்கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அந்தக் கும்பல் செந்தில்குமாரை முதலில் அரிவாளால் வெட்டிக்கொலை செய்தனர். இதனை தட்டிக்கேட்க வந்த அவரது தம்பி மோகன்ராஜ் மற்றும் மோகன்ராஜின் தாய் புஷ்பவதி, செந்தில்குமாரின் சித்தி ரத்தினாம்பாள் ஆகியோர் அந்தக் கும்பலை கண்டித்துள்ளனர். அப்போது அந்த கும்பல் இவர்களையும் அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்களால் கடுமையான வெட்டியும், தாக்கவும் செய்துள்ளனர்.

இதில் அவர்களது கை, கால்கள் என தனித்தனியாக வெட்டி வீசப்பட்டன. இதுபோல் முகத்திலும் அரிவாளால் வெட்டு விழுந்துள்ளது. கண் இமைக்கும் நேரத்தில் 4 பேரையும் வெட்டிச்சாய்ந்த அந்த கும்பல்

அங்கிருந்து தப்பியோடியது. இதற்கிடையே அலறல் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு அந்த பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் குவிந்தனர். இது குறித்து பல்லடம் போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பல்லடம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

மேலும், கொலையாளிகளை கைது செய்யக்கோரி, பொதுமக்கள் அந்த பகுதியில் சாலை மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர். தொடர்ந்து விரைவாக கைது செய்வதாகக்கூறி போலீசார் உறுதியளித்ததை தொடர்ந்து போராட்டம் முடிவுக்கு வந்தது.

இதற்கிடையே சம்பவ இடத்திற்கு திருப்பூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சாமிநாதன், கோவை மேற்கு மண்டல ஐ.ஜி. பவானி ஈஸ்வரி, பல்லடம் டி.எஸ்.பி. சவுமியா மற்றும் போலீசார் வந்தனர். சம்பவ இடத்தில் விசாரணை நடத்திய அதிகாரிகள் இரவு பல்லடம் அரசு மருத்துவமனையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இந்நிலையில் கொலையாளிகளை பிடிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தனிப்படை போலீசார் திருப்பூர் அருகில் உள்ள கோவை, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு விரைந்துள்ளனர். மேலும், சந்தேகத்தின் அடிப்படையில் தென்மாவட்டங்களுக்கும் சிலர் சென்றுள்ளனர்.

மேலும், பல்லடம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகள் என மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து சோதனைச்சாவடிகளிலும் போலீசார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். 500க்கும் மேற்பட்ட போலீசார் மருத்துவமனை மற்றும் பல்லடம் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர். கொலை செய்யப்பட்டத்தில் மோகன்ராஜ் என்பவர் பொங்கலூர் மேற்கு ஒன்றியம் மாதப்பூர் பஞ் சாயத்து பா.ஜனதா கிளைத்தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் தொடர்பாக கொலை வழக்கு பதிவு செய்த பல்லடம் போலீசார் விசாரணை தொடங்கி உள்ளனர். முன்விரோதத்தின் காரணமாகவும் இந்த கொலை சம்பவம் நடந்திருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணை நடந்தது.

இதில் முன் விரோதத்தில் தான் செந்தில்குமார் மற்றும் அவரது குடும்பத்தினர் கொலை செய்யப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. செந்தில்குமாரிடம் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த வெங்கடேஷ் (34) என்பவர் டிரைவராக வேலை செய்து வந்துள்ளார். கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு பணம் பிரச்சினை தொடர்பாக செந்தில்குமார், வெங்கடேசை வேலையை விட்டு நீக்கியுள்ளார். இதில் அவர்களுக்கு இடையே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் நேற்று வெங்கடேஷ் மற்றும் சிலர் செந்தில்குமார் இடத்தில் மது அருந்தி பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளனர். மேலும் அவர்கள் 4 பேரையும் கொடூரமாக கொலை செய்துள்ளனர். இந்த தகவல்கள் போலீஸார் விசாரணையில் தெரிய வந்துள்ளது. முக்கிய குற்றவாளியான குட்டி என்கிற வெங்கடேஷ் என்பவரை தனிப்படை போலீஸார் பிடித்து விசாரித்து பிறகு அனைத்து குற்றவாளையும் கைது செய்திருக்கிறார்

நேர்மையான அதிகாரிகள் தற்போது ரப்பர் ஸ்டாம்ப் அதிகாரியாக மாறியதால் பொதுமக்களை போன்று கைகட்டி வேடிக்கை பார்க்கிறார்.

**- நிர்வாக ஆசிரியர் டாக்டர் M. ஹரிகிருஷ்ணன்**



# வீரலட்சுமி இல்லை வசூல் லட்சுமி

## பல ஆண்களுடன் தொடர்பு...

சென்னை ராமாபுரத்தை சேர்ந்தவர் வீரலட்சுமி 34 வயதாகிறது. தமிழர் முன்னேற்றப்படை என்ற அமைப்பின் நிறுவனர் தலைவர் ஆவார். குஷ்பு வீடு முற்றுகை... இப்படி தமிழக பரபரப்பு நிகழ்வுகளின் மூலம் மீடியாக்களின் கவனத்தை கவர்ந்தவர். இதற்கு பிறகு தமிழக மக்களின் பல பிரச்சனைகளில் தலையிட்டு விளம்பரத்திற்காக போராட்டங்களையும் முன்னெடுத்து வந்தவர். இவர், கடந்த சட்டமன்ற தேர்தலின்போது, பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் " போட்டியிட்டு சுமார் 200 வாக்குகள் மட்டும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






# சைக்கோ நடிகைக்காக...

நடிகை விஜயலட்சுமி சென்னை கமிஷ்னர் அலுவலகத்தில் நாம் தமிழர் சீமானுக்கு எதிராக சமீபத்தில் புகார் கொடுத்தார். இது தொடர்பாக அதிர்ச்சி அளிக்கும் விஷயங்களை விஜயலட்சுமி பேசினார். சீமானை கைது செய்ய வேண்டும் என்று விஜயலட்சுமி புகார் கொடுத்தார்.

அவர் தனது பேட்டியில், உங்க வீட்டில் ஒரு பெண்ணாக நினைத்து எனக்கு உதவுங்கள். 2011 கேஸை மீண்டும் விசாரிக்க வேண்டும். இதில் விசாரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. சீமான் திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறினார்.

அதனால் இந்த விவகாரத்தில் பேச்சு



வார்த்தை நடத்தி சமாதானம் ஆகினோம். அதிமுக இதில் விசாரிக்கவே இல்லை. அவர்கள் என்னை மட்டுமே விசாரணை செய்தனர், சீமானை விசாரிக்கவில்லை. ஏன் சீமானை விசாரிக்கவில்லை என்பது எல்லோர்க்கும் தெரியும்.

சீமான் என்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி சமாதானம் செய்தார். அதனால் அவர் கைது செய்யப்படாமல் இருந்தார். அவர் சமாதானம் செய்ததால் அவரை கைது செய்ய விடாமல் அமைதி செய்தோம்.

ஆனால் இப்போது இனியும் காத்திருக்க முடியாது. அவர் என்னை நம்ப வைத்து ஏமாற்றிவிட்டார். அவை விடக்கூடாது. சீமானை கைது செய்ய வேண்டும். சீமானை கைது செய்யாமல் இருக்க கூடாது. அவருக்கு எதிராக புதிதாக புகார் கொடுத்துள்ளோம்.

அவர்பேசியதைஎல்லாம்,அவர்சொன்னதை எல்லாம் போலீசுக்கு கொடுத்துள்ளோம். உங்க வீட்டில் ஒரு பெண்ணாக நினைத்து எனக்கு உதவுங்கள். போலீஸ்தான் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும். நான் சில விஷயங்களை போலீசிடம் சொல்லி இருக்கிறேன். என்ன நடக்கிறது என்று பார்க்கலாம், என்று நடிகை விஜயலட்சுமி செய்தியாளர் சந்திப்பில் கூறினார்.

வீரலட்சுமி: விஜயலட்சுமி புகார் கொடுக்க சென்ற போது, அவருடன் வீரலட்சமி உடன் இருந்தார். தமிழர் முன்னேற்றப் படையின் நிறுவனத் தலைவர் வீரலட்சுமி கடந்த 2021ம் ஆண்டே விஜயலட்சுமிக்கு ஆதரவாக களமிறங்கினார். இன்றும் போலீசில் விஜயலட்சுமி புகார் கொடுக்க சென்ற போதும் வீரலட்சுமி அவருடன் இருந்தார்.

அதன்பின் பேட்டி கொடுக்க வந்த விஜயலட்சுமியிடம் என்ன பேச வேண்டும் என்று தமிழர் முன்னேற்றப் படையின் நிறுவனத் தலைவர் வீரலட்சுமி அவருக்கு ஆலோசனை வழங்கினார். ஒரு காலத்தில் தமிழ்நாடு அரசியலில் மிகவும் பிரபலமாகி பரபரப்புக்கு பஞ்சம் இல்லாமல் இருந்தார்.

முக்கியமாக ஒருவர் தனக்கு ஆபாச படங்களை அனுப்பியதாக வீரலட்சுமி வீடியோ வெளியிட்டார். அதில் அந்த நபர்பருக்கு எதிராக வெளியிட்ட வீடியோவில் கையில் வீச்சரிவாளோடு நின்று மிரட்டல் விடுத்தார். முக்கியமாக அந்த நபரின் ஆண் உறுப்பை அறுப்பேன் என ஆவேசமாக பேசியிருந்தது பெரும் பரபரப்பை கிளப்பியது. பின்னர் போலீசார் ஆபாச படங்களை அனுப்பிய நபரை கைது செய்தனர்.

இந்த விவகாரத்தில்தான் வீரலட்சுமி கவனம் பெற்றார். கடந்த 2021ம் ஆண்டு கூட நடிகை விஜயலட்சுமிக்கு நீதி கோரி வீரலட்சுமி போராட்டம் செய்தார். இந்த நிலையில்தான் தற்போது மீண்டும் வீரலட்சுமி விஜயலட்சுமிக்கு ஆதரவாக களமிறங்கி உள்ளார்.

புதிய புகார்: இந்த நிலையில் சீமானுக்கு எதிராக வேறு ஒரு புதிய புகாரை கொடுக்க நடிகை விஜயலட்சுமி மற்றும் வீரலட்சுமி தரப்பு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக வீரலட்சுமி அளித்த பேட்டியில், சீமானிடம் வைர செயின் உள்ளது. உங்களிடம் அந்த வைரம் எப்படி வந்தது என்று எங்களுக்கு தெரியும்.

அதை எங்கே வாங்கினீர்கள். எப்போது வாங்கினீர்கள், எப்படி வாங்கினீர்கள் என்று கணக்கு காட்ட வேண்டும். அதற்கான பில்லை வெளியிடுங்கள். 3 நாட்களுக்குள் நாட்டு மக்களுக்கு இதற்கான பல்லை வெளியிடுங்கள். நீங்கள் மாநிலம் முழுக்க கூட்டம் நடத்துவதற்கு யார் காசு கொடுத்தது. அதை சொல்லுங்கள்.

**வீரலட்சுமி கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்திற்கு வசூல் செய்ய வந்தால் நாங்கள் கருப்பு கொடியை கட்டுவதாக மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தினர் அறிவித்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

இதற்கான கணக்குகளை நீங்கள் வெளியிடவில்லை என்றால் நான் நேரடியாக சென்று அமலாக்கத்துறை, வருமான வரித்துறையிடம் உங்களை பற்றி புகார் கொடுப்பேன். உங்களுக்கு எதிராக ஆவணங்களை கொடுப்பேன் என்பதை மறக்க வேண்டாம். நீங்கள் இதை செய்ய வேண்டும். இல்லையென்றால் நடப்பதே வேறு என்று சீமானுக்கு எதிராக வீரலட்சுமி பேசி இருக்கிறார்.

போலீசார் விசாரணை மாஜிஸ்திரேட் வாக்குமூலம்: இது தொடர்பாக விஜயலட்சுமியிடம் போலீசார் விசாரணை செய்தனர். போலீசார் விசாரணையின் போது நடிகை விஜயலட்சுமி நடந்து கொண்ட விதம் கடுமையான விவாதங்களை ஏற்படுத்தி உள்ளது. விஜயலட்சுமி மிகவும் எமோஷனலாக காணப்பட்டு உள்ளார். அடிக்கடி விசாரணையில் அழுதுள்ளார்.சீமானை கைது செய்ய வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கோரிக்கை வைத்துள்ளார்.

நடக்குறதை பார்த்தா! விஜயலட்சுமி கேஸில் முறையாக காய் நகர்த்திய போலீஸ்! சீமானுக்கு செக்! அடுத்து அதுவா நடக்குறதை பார்த்தா! விஜயலட்சுமி கேஸில் முறையாக காய் நகர்த்திய போலீஸ்! சீமானுக்கு செக்! அடுத்து அதுவா.

இந்த விசாரணையின் போது காவல் நிலையத்தை விட்டு வெளியே செல்ல நடிகை விஜயலட்சுமி மறுத்ததாக கூறப்படுகிறது. சீமான் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, வெளியேற மறுப்பதாக கூறப்படுகிறது.விசாரணையில் சில முக்கிய வீடியோக்களை விஜயலட்சுமி கொடுத்துள்ளார்.

முக்கிய போன் ரெக்கார்டுகள், மெசேஜ்கள், பணம் கொடுத்த வங்கி விவரங்களையும் விஜயலட்சுமி போலீசில் பகிர்ந்து உள்ளார். இதையடுத்து சீமான் மீதான புகாரில் நடிகை விஜயலட்சுமியை மாஜிஸ்திரேட் முன்னிலையில் போலீசார் ஆஜர்படுத்தி வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

விஜயலட்சுமி மாஜிஸ்திரேட்: இதையடுத்து விஜயலட்சுமி மாஜிஸ்திரேட் முன் வாக்குமூலம் கொடுத்த நிலையில் நாம் தமிழர் கட்சியினர் பதற்றத்துடன் காணப்பட்டனர். இதில் சீமான் மீது எப்ஐஆர் போடப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல் வெளியானது. அதன்பின் அவருக்கு மாஜிஸ்திரேட் முன்னிலையில் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு உள்ளது. அவருக்கு 8 முறை கரு உண்டாகி அதை கலைத்ததாக, சீமான் தனக்கு தொந்தரவு, தொல்லை, கொடுமை கொடுத்ததாக குறிப்பிட்டு இருந்தார்.



இதை உறுதி செய்ய மருத்துவ பரிசோதனை நடந்துள்ளது.

- பொறுப்பு இணை ஆசிரியர்
சென்னை S. முத்து இப்ராகிம் ஷா

# அடுத்த முதல்வர் சீமான்..!

### யார் இந்த சீமான்?

சீமான் 1966 ஆம் ஆண்டு, நவம்பர் 08 ஆம் நாள் சிவகங்கை மாவட்டத்திலுள்ள, இளையான்குடி வட்டத்தில் அரனையூர் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவர் பெற்றோர் செந்தமிழன் மற்றும் அன்னம்மாள் ஆவர்.

இவரின் உடன்பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள் மற்றும் சகோதரர் ஒருவரும் ஆவர். இவரின் தந்தை செந்தமிழன் 2021 மே 13 அன்று காலமானார். இவர் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளார். முன்னாள் சபாநாயகர் காளிமுத்துவின் மகள் கயல்விழியை திருமணம் செய்து கொண்டார். திருமணவிழா தமிழ் முறைப்படி உலகத் தமிழர் பேரவை தலைவர் பழ நெடுமாறன் தலைமையில் சென்னை ஒய்.எம்.சி.ஏ திடலில் நடைபெற்றது.



சீமானின் தந்தை காங்கிரசின் உறுப்பினர் ஆவார். சீமான் அவரது உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி ஆண்டுகளில், திராவிட இயக்கத்தின் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டார். திரைத்துறையில் பணியாற்ற வேண்டும் என்ற தனது கனவைத் தொடர அவர் சென்னை சென்றார்.

சீமான் 2007 ஆம் ஆண்டில் தனது வாழ்த்துகள் திரைப்படத்தின் மூலம் சந்தித்தார். 2011 இல், சீமான் தன்னை

ஏமாற்றியதற்காக அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். 2011 ஆம் ஆண்டில், இலங்கை தமிழ் பெண்ணை திருமணம் செய்வதில் சீமான் தனது ஆர்வத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தினார் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளியின் விதவையான யர்ல்மதியைத் தேர்ந்தெடுத்தார், ஆனால் பின்னர் அவ்வாறு செய்யவில்லை.

## திரைத்துறை வாழ்க்கை

கல்லூரி முடிந்த பின் திரைப்பட இயக்குநராக வேண்டும் என்னும் கனவோடு சென்னை சென்றார். அங்கு மணிவண்ணன், பாரதிராசா போன்ற முன்னணி இயக்குனர்களிடம் உதவி இயக்குனராகப் பணிபுரிந்தார். சில படங்களில் வசனகர்த்தாவாகவும் பணியாற்றினார். இவரின் முதல் படமான பிரபு, மதுபாலா கொண்டு இயக்கிய பாஞ்சாலங்குறிச்சி திரைப்படம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பதித்தது. மீண்டும் பிரபுவைக் கொண்டு இயக்கிய இனியவளே மற்றும் சத்தியராசை கொண்டு இயக்கிய வீரநடை தோல்வியடைந்தது. நீண்ட கால இடைவேளைக்குப் பின் மாதவன், பூசா, வடிவேலு போன்றோர்களைக் கொண்டு இயக்கிய தம்பி படம் பெரும் பெயரைப் பெற்றுத்தந்தது. அதே ஆண்டில் மாதவனை வைத்து இயக்கிய வாழ்த்துக்கள் திரைப்படம் பெரும் இழப்பைச் சந்தித்தது. இப்படம் முழுவதும் கலப்படமற்ற தூய தமிழ் வசன நடைக்கொண்டு உருவாக்கியிருந்தார். மாயாண்டி குடும்பத்தார், பொறி, பள்ளிக்கூடம், எவனோ ஒருவன், மகிழ்ச்சி போன்ற திரைப்படங்களில் நடித்துள்ளார். மாயாண்டி குடும்பத்தார் படத்தில் பாடல் ஒன்றையும் பாடியுள்ளார்

## ஈழ ஆதரவு

சீமான் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரான




வே.பிரபாகரனுக்குத் தொடர்ந்து ஆதரவு குரல் கொடுத்துவருகிறார்

## நாம் தமிழர் கட்சி உருவான கதை

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர், சீமான்.

சில காலம் திராவிடர் கழகத்துடன் சேர்ந்து பெரியாரின் கொள்கைகளைப் பரப்பிக்கொண்டுவந்தார். பின் தன் தலைமையில், நாம் தமிழர் இயக்கத்தைத் துவங்கி பல போராட்டங்களில் ஈடுபட்டார். சீமான் மே 10, 2010 அன்று தன் இயக்கத்தை அரசியல் கட்சியாக அறிவித்தார். இக்கட்சி சார்பில் தனி ஈழம் அமையக் கோரியும், இராசீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன் போன்றோரின் விடுதலை கோரியும், இராசபச்சேவின் இந்திய வருகையைக் கண்டித்தும், மீத்தேன் எரிக்காற்று எடுக்கும் திட்டத்தை எதிர்த்தும், தண்ணீர் தர மறுத்த கேரளா, கருநாடக அரசுகளைக் கண்டித்தும், இந்தித் திணிப்பு மற்றும் சமசுகிருத வருவதை எதிர்த்தும் மேலும் பல போராட்டங்களைத் தமிழகத்தில் நடத்தியுள்ளார்.




2011 சட்டமன்றத் தேர்தலிலும், 2014 நாடாளுமன்றத் தேர்தலிலும் திமுக, காங்கிரசு கட்சிகளை எதிர்த்தும் அஇஅதிமுக கட்சிக்கு ஆதரவாகவும் பிரசாரம் மேற்கொண்டார். 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற

சட்டமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி 234 தொகுதியிலும் தனித்துப் போட்டியிட்டது. ஆனால் அந்த தேர்தலில் இந்த கட்சியானது போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் படுதோல்வியை சந்தித்தது.

## அரசியல் செயல்பாடு (2011 - 2019)

வேலூர் சிறையில் ஐந்து மாத காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், 2011இல் சீமான் மாநில சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு கட்சியின் தோல்விக்காக தீவிரமாக பிரச்சாரம் செய்தார்.[30][31] அந்த தேர்தலில் அதிமுகவிற்கு ஆதரவை வழங்கினார். அப்போது `இலை மலர்ந்தால் ஈழம் மலரும்' என்ற வாசகத்தையும் பயன்படுத்தினார்.[32][33] காங்கிரசு கட்சி போட்டியிடும் 63 இடங்களில் 59 இடங்களில் சீமான் பிரச்சாரம் செய்தார்,



மேலும் ஒரு தொகுதி தவிர மற்ற அனைத்து தொகுதிகளிலும் கட்சி தோற்கடிக்கப்பட்டது

2014 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, காங்கிரசு, பாசக மற்றும் மதிமுக ஆகிய கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தோற்கடிப்பதற்காக பிரச்சாரம் மேற்கொண்டார்.

## 2016 தமிழக சட்டமன்றத் தேர்தல்

2016 சட்டமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி போட்டியிட்டது, இவர் கடலூர் தொகுதியில் இருந்து முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டார். நாம் தமிழர் கட்சி 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடந்த தேர்தல்களிலும் போட்டியிட்டது. இவர் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட




தேர்தல் சின்னம் இரட்டை மெழுகுவர்த்திகள். சீமான் தனது வேட்பாளர்களை, கடலூரில் பிப்ரவரி 2016 இல் அறிமுகப்படுத்தினார். இவர் கடலூரில் போட்டியிட்டு 12,497 வாக்குகளைப் பெற்று ஐந்தாவது இடத்தைப் பிடித்தார். நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள் போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வியடைந்தாலும் 1.1 விழுக்காடு வாக்குகளை அக்கட்சி பெற்றது.

## 2019 நாடாளுமன்றத் தேர்தல்

ஏப்ரல் மாதம் 18 ஆம் தேதி நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டியிட்டது. தமிழகம் மற்றும் புதுவையிலுள்ள 40 தொகுதிகளுக்கான நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் 19 தொகுதிகளுக்கான சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஒரே மேடையில் அறிமுகப்படுத்தும் மாபெரும் பொதுக்கூட்டம் மார்ச்சு 23, 2019 அன்று மாலை 05 மணியளவில் சென்னை, மயிலாப்பூர் மாங்கொல்லை திடலில் நடைபெற்றது.[39] இதில் புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளில் 20 பெண் வேட்பாளர்கள் 20 ஆண் வேட்பாளர்கள் ென இருபாலருக்கும் சரிபாதி இடம்கொடுத்து தமிழகமெங்கும் பரப்புரை செய்தார். இதில் நீலகிரி மக்களவை தொகுதி பெண் வேட்பாளரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. இத்தேர்தலில் 4% வாக்குகளைப் பெற்றது, இதனால் அனைத்து தொகுதிகளிலும் வைப்புத்தொகையை இழந்தது. மேலும் வேலூர் மக்களவைத் தொகுதியில் தேர்தல் நிறுத்தப்பட்டது. வேலூர் நாடாளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் ஆகத்து மாதம் 5 ஆம் தேதி நடைபெற்றது. இந்த தேர்தலில் தனித்து போட்டியிட்டு மூன்றாம் இடத்தை அடைந்தது.

## 22 தொகுதி இடைத்தேர்தல்2019

18 தொகுதி இடைத்தேர்தல் ஏப்ரல் 18 ஆம் தேதியும், 4 தொகுதி இடைத்தேர்தல் மே மாதம் 19 ஆம் தேதியும் நடைபெற்றது. இந்த இடைத்தேர்தலிலும் நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டியிட்டது. இதில் ஆண், பெண் வேட்பாளர்களை சரிபாதி தொகுதிகளில் போட்டியிட வைத்து பரப்புரை செய்தார்.

## 2021 சட்டமன்ற தேர்தல்

தமிழக சட்டமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட்டது. [42] மார்ச்சு 7, 2021 அன்று சென்னை ஒய். எம். சி. ஏ மைதானத்தில் கட்சியின் 234 வேட்பாளர்களையும் ஒரே மேடையில் சீமான் அறிமுகம் செய்து வைத்தார். சென்னை திருவொற்றியூர் தொகுதியில் சீமான் போட்டியிட்டார். திருவொற்றியூரில் போட்டியிட்ட சீமான் தோல்வியடைந்தாலும் 48,597 வாக்குகள் பெற்று மூன்றாமிடம் பிடித்தார். நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள் போட்டியிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வியடைந்தாலும் அதிக தொகுதிகளில் மூன்றாமிடமும், 6.72 சதவிகித வாக்குகளையும் அக்கட்சி பெற்றது

மே 18, 2010 அன்று ஆதித்தனாரால் 1958 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நாம் தமிழர் இயக்கம் அதன் பெயரை நாம் தமிழர் கட்சி என்று மாற்றியது. பிரதான அரசியல் கட்சிகளில் இருந்து மாறுபட்டு மாற்று அரசியல் கட்சியாக அமையும் என அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். சுதந்திரத் தமிழ் ஈழத்தை உருவாக்குவதே கட்சி மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தமிழர்களின் தார்மீக இலக்காக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

- தொகுப்பு துணை ஆசிரியர்கள்சென்னை K. ரவிச்சந்திரன்.

## செய்தி துளிகள்!

### சட்ட ஒழுங்கு சீர்கெட்ட திமுக அரசின் ஊழல் திட்டம்!

இன்று முதல் வாகன ஓட்டிகள் ஜாக்கிரதையாக இருக்கவும், மகளிர் உரிமைத்தொகை தருவதற்காக ஒவ்வொரு காவல் நிலையமும் தினந்தோறும் அபராதம் மூலம் ரூபாய் ஒரு லட்சம் வசூலித்து தர வேண்டும் என்று கட்டாய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே காவல்துறையினர் இன்று முதல் வாகன ஓட்டிகளை வளைத்து, வளைத்து, ஹெல்மெட், லைசென்ஸ், சீட் பெல்ட், இன்சூரன்ஸ், ஓவர் ஸ்பீடு, மது போதை, ஒன்வே, போன்ற அனைத்து பிரச்சனைகளுக்காகவும் ஏகப்பட்ட வழக்குகளை பதிவு செய்ய உள்ளனர் எனவே வாகன ஓட்டிகள் தேவையான ஆவணங்களுடன் மிகுந்த ஜாக்கிரதையாக செல்லவும்.






# பாசிசம் எதிர்ப்போம்!

## மண், மொழி, மனிதம் காப்போம்!

## தூத்துக்குடியில் தாமக பொதுக்கூட்டம்.

மிகச் சிறப்பான முறையில் தோழமையர்களையும் மக்களையும் ஒருங்கிணைத்து ஓர் மாபெரும் பொதுக்கூட்டத்தை நடத்திய தாமகவின் இளம் தலைவர்களான எஸ்.ஆர்.அஹமது,செ.இப்ராஹிம், த.தியாகராசன்,மற்றும் கட்சியின் செயல்வீரர்கள் பெ.இலட்சுமணன், தமிழ்ச்செல்வன், ரசூல், மற்றும் அங்கிருந்து உதவிய தோழமை உறவுகள் என அனைவருடனும் பொதுக்கூட்டத்திற்கு முன்னதாகவே வந்து பங்கேற்று நிகழ்ச்சிக்கான முன்னெடுப்புகளில் பெருந்துணையாக நின்ற எமது தோழமையர்களுக்கும் இந்நேரத்தில் தாயக மக்கள் கட்சி நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அடுத்தடுத்த தொடர் மக்கள் பணிக்கு பேருதவியாய் நிற்க வேண்டும் என்றும் தாமக அன்புடன் கேட்டுக்கொள்கிறது....

பங்கேற்று உரையாற்றிய ஆளுமைகள் தலைவர்கள். மூத்த தோழர், மீ.த.பாண்டியன்.தலைவர், தமிழ்த்தேச மக்கள்






முன்னணி, தோழர்.குடந்தை.அரசன் தலைவர், விடுதலை தமிழ் புலிகள் கட்சி, பேராசிரியர் .டி.எம்.புரட்சிமணி தலைவர்.நீலப் புலிகள் இயக்கம், தோழர்.கா.கண்ணதாசன் பொதுச்செயலாளர் தமிழரசுக் கட்சி, தோழர்.மெய்யப்பன் கொ.ப.செயலாளர். தமிழ்த்தேசக் குடியரசு இயக்கம், தோழர். பால்.பிரபாகரன் திராவிடர் விடுதலைக் கழகம், தோழர்.சூ.க.சங்கர் திராவிடத் தமிழர் கட்சி, தோழர்.கா.மை.அஹமது இக்பால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தோழர். யூசுப் துணைத் தலைவர் முஸ்லீம் முன்னணி கழகம், தோழர்..எழிலரசு இளங்கீரன் (வழக்கறிஞர்) மாநிலச் செயலாளர், தமிழர் தேசம் கட்சி, தோழர்.ந.தமிழமுதன் மாநில ஒருங்கிணைப்பாளர் இந்திய மூலநிவாசி காவல் படை, தோழர்.மா.மாரிச்செல்வம் மாவட்டச் செயலாளர் தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தோழர்.கிருஷ்ணமூர்த்தி அமைப்புசாரா தொழிலாளர் கூட்டமைப்பு, தோழர். வீரபாண்டி மகேஷ் ஸ்டெர்லைட் எதிர்ப்பு கூட்டமைப்பு, தோழர்.சேமா.சந்தனராஜ் மாவட்டச் செயலாளர் தமிழர் விடியல் கட்சி, தோழர்.மெரினா பிரபு மாந்த நேய உணர்வாளர் கூட்டமைப்பு,தோழர்.தூத்துக்குடி சம்சுதீன் தலைவர்.இஸ்லாமிக் பெடரேசன் ஆப் தமிழ்நாடு, தோழர்.அசன்.மனிதநேய மக்கள் கட்சி, தோழர்.சுஜித் மாவட்டச் செயலாளர் புரட்சிகர இளைஞர் முன்னணி, தோழர்.முகமது ஜான் மாவட்டச் செயலாளர் ஐக்கிய முஸ்லீம் முன்னேற்ற கழகம்,தோழர். தருமபுரி.தீனா மண்டலச் செயலாளர் இந்திய மூலநிவாசி காவல்படை, தோழர்.தேன்மொழி. தலைவர் தாயக பெண்கள் முன்னணி, உள்ளிட்டவர்கள் பங்கேற்று உரையாற்றிட பொதுக்கூட்டம் சிறப்பாய் அமைந்தது.

பகுதிப் பொது மக்கள் இறுதி வரையிலும் சனநாயக ஆளுமைகளின் குரல்களிலிருந்து வெளிப்பட்ட பாசிசத்திற்கு எதிரான குரல்களுடன் தங்களையும் இணைத்துக்கொண்டனர்.

இறுதியாக முத்தையாபுரம் பகுதியைச் சார்ந்த சனநாயக ஆளுமைகள் சிலரின் சார்பாக பங்கேற்ற அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து சனநாயக ஆளுமைகள் மற்றும் பகுதிபொது மக்கள் அனைவருக்கும் நன்றியுடன்...

எஸ்.ஆர்.அஹமது பொதுச் செயலாளர், த.தியாகராாசன் பொதுச் செயலாளர், செ.இப்ராஹிம் மண்டலச் செயலாளர். தாயக மக்கள் கட்சி நடுவக் குழு.

- சிறப்பு துணை ஆசிரியர்
நாகர்கோவில் Dr S. முகமது அலி

# கிருஷ்ணகிரி மாவட்ட ஆம்புலன்ஸ் சேவைக்காக நிதி உதவி



மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் சார்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்திற்காக ஆம்புலன்ஸ் வாங்குவதற்கு மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மற்றும் மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கையில் ஆசிரியரும் A. கேம்ராஜன் அவர்கள் 25,000 காசோலைக்கு தேசிய தலைவர் G. வெங்கடேசன் 16.07.2023 மாலை 3 மணிக்கு மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் மாவட்ட அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. மேற்படி நிதி மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தில் வங்கி கணக்கில் சேர்க்கப்பட்டது.





# இனி நீதிபதிகள் தேவை இல்லை

# நாங்கள் தான் நீதிபதிகள்

## RI தீபா, VAO ராஜமாணிக்கம் உளறல்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் அதிராம்பட்டினம் ஏரிப்புகரை கிராமம் மஸ்னி நகரில் சுமார் பல வருடங்கள் அனுபோகத்திலுள்ள இடத்திற்க்கு வீட்டு ரசீது ஊராட்ச்சி மன்ற அனுமதி மின்சார இணைப்புகள் உள்ளது.

இந்த இடத்தில் பல வருடம் இஸ்லாமிய குடும்பம் வசித்து வந்தது குடி நீர் சம்பந்தமாக ஏரிபுறக்கரை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஜல்ஜீவன் மிஷின் திட்டத்தில் குடிநீர் இணைப்பு கேட்டத்தற்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இந்த குடும்பதிற்க்கு குடிநீர் இனைப்பு மறுக்கபட்டது பிறகு

## நாங்கள் தான் கலெக்டர்..!



வருவாய் ஆய்வாளர் தீபா



ஏரிபுறக்கரை VAO ராஜமாணிக்கம்



## நேர்மையான உள்துறை செயலாளர் அமுதா IAS பார்வைக்கு..!

அவர்கள் மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு WP(MD17218/2023) நிலுவையில் இருந்து வருகிறது பிறகு மன்ல்மாபியா கும்பல் ராஜாமடம் ஏரியில் சட்டவிரோதமாக மனல் எடுத்து விற்று வந்தால் ஊராட்சி மன்ற தலைவர் சக்தி மற்றும் மணல் மாபியா கும்பல் மீது மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இருந்தார்.

இந்நிலையில் மணல் மாபியா கும்பல் தலைவர் சதிஷ் அதிராம்பட்டினம் வருவாய் ஆய்வாளர் தீபா அவர்களுக்கும் மற்றும் ஏரிபுறக்கரை VAO ராஜமாணிக்கம் ஆகிய இருவரும் (1905ஆம் ஆண்டு சென்னை||| வது சட்டத்தில் 7வது பிரிவின்கீழ் அறிவிப்பு நோட்டீஸ் 13/07/2023 கொடுத்து இருந்தார்கள்.

பிறகு 14/07/2023 அதிராம் பட்டினம் வருவாய் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு ஆஜராகி திருமதி. தீபாவிடம் விளக்கம் கொடுத்து பிறகு 19/07/2023. நான் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் முன் ஆஜராகி பதில் விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள். அதன் பிறகு மீண்டும் அதிராம்பட்டினம் வருவாய் ஆய்வாளர் ஏரிப்புறகரை கிராம நிர்வாக அதிகாரி அவர்களும் இரண்டாவது நோட்டிஸ் குறுகிய காலகெடுவில் கொடுத்து 17/08/2023 மாவட்ட ஆட்சியர் முன்பு ஆஜராகுமாறு கொடுத்திருந்தார்.

அதன் பிறகு ஆகஸ்ட் 15 சுதந்திர தினமாக இருப்பதால் 17/08/2023 மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு ஆஜராவதற்கு சென்று கொண்டிருக்கும் பொழுது வருவாய் ஆய்வாளரும் தீபா அவர்களும் கிராம நிர்வாக அதிகாரி ராஜமாணிக்கம் அவர்களும் மேற்படி இடத்திற்கு காலை 9 மணிக்கு சென்று சில குண்டல்களை அழைத்துக் கொண்டு மணல் மாபியா கும்பலுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு இவர்கள் உதவியுடன் E B இணைப்பை JCB உதவியுடன் EB அனுமதி இல்லாமல் இணைப்பை துண்டித்து விட்டு பிறகு JCB உதவியுடன் மனல் மாபியா கும்பலுடன்

- நோட்டிஸ் 17 ம் தேதி காலக்கெடுவுக்குள் ஆஜராக வேண்டும் என்று சொல்லிக்கொண்டு 17ஆம் தேதி காலை 9 மணிக்கு கட்டிடத்தை இடிப்பதற்கு அவசியம் என்ன?
- நோட்டீஸ் 5 6 7 8 பைனல் நோட்டீஸ் கொடுக்காமல் கட்டிடத்தை உடனே இடித்தது அவசியம் என்ன?
- மேற்படி சர்வ எண் 277/1 வாய்க்கால் இடமாக இருந்தால் ஏன் பொதுப்பணித்துறை இதில் சம்பந்தப்படவில்லை?
- பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஏன் இதிலே தலையிடவில்லை?
- ஏன் பொதுப்பணித்துறை இது சம்பந்தமாக எந்த நோட்டீஸும் உத்தரவு போடவில்லை?
- ஏன் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இடிக்கும் இடத்திற்கு வரவில்லை?
- ஏன் இடிக்கும் பொழுது வருவாய் துறை அதிகாரி மட்டும் கிராம நிர்வாக அதிகாரி இரண்டு பேர் க்கும் அதிகாரம் இல்லாதபோது இடிப்பதற்கு அதிகாரம் கொடுத்தது யார்?
- ஏன் இடிக்கும் இடத்திற்கு கோட்டாட்சியர்ரோ அல்லது வட்டாட்சியர்ரோ அல்லது துணை வட்டாட்சியர்கள் வராதது ஏன்?
- ஏன் மேற்படி அரசு புறம்போக்கு இடத்தில் இருக்கும் இடத்தை கையடப்படுத்துவதற்கு சட்டத்தில் இடம் இருந்த போதும் கட்டிடத்தை இடிப்பதற்கு எப்போது புதிய சட்டம் எப்போது இயற்றப்பட்டது?
- தாங்கள் சொல்வது போல் இதே சர்வே நம்பரில் பலவீடுகள் இருந்தும் இந்த இடத்தை மட்டும் இடிப்பதற்கு இதில் உள்நோக்கம் என்ன ?
- 60 வருட கட்டிடத்தை கண்துடைப்புக்காக ஒரு மாத காலக்கோடு கொடுத்து கட்டிடத்தை இடித்தது ஏன்?
- இந்த இடத்தின் கட்டிடத்தை இடிப்பதற்கு இன்று வரை உயர் அதிகாரி உத்தரவு அல்லதது நீதிமன்ற உத்தரவு கொடுக்காதது ஏன்?
- இந்த இடத்தின் வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டு இருக்கும் பொழுது விரைவாக இடிப்பதற்கு காரணம் என்ன?

## செய்தி துளிகள்!

### அனைத்து விஞ்ஞானிகளும் அரசு பள்ளிகள் பயின்றவர்கள்

- முக்கிய மிஷன்களின் திட்ட இயக்குனர்கள் !
- சந்திராயன் 1 மயில்சாமி அண்ணாதுரை !
- சந்திராயன் 2 வனிதா முத்தையா !
- சந்திராயன் 3 வீரமுத்துவேல் !
- மங்கள்யான் சுப்பையா அருணன் !
- இவர்கள் அனைவரும் தமிழர்கள்....
- இதைவிட முதன்மையானது
- இவர்கள் தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தில் படித்தவர்கள் !

**09.10.2023 அன்று சென்னை அருகில் உள்ள வள்ளுவர் கோட்டம் என்ற இடத்தில் உண்ணாவிரதமும், 20.10.2023 அன்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் முன்பு தர்ணா ஆர்ப்பாட்டமும் நடைபெறும்.**




சுற்றியுள்ள வேலைகளை அகற்றிவிட்டு சட்ட விரோதமாக கட்டிடத்தை இடித்துவிட்டு கட்டிடத்தில் உள்ளே இருந்த பல லட்ச ரூபாய் மதிப்பான பொருட்களை சேதப்படுத்திவிட்டு தென்னை பிள்ளை மற்றும் மரம் செடிகளை நாசப்படுத்தி இருக்கிறார்கள்.

மேலும் வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி இருவரும் அறிவிப்பு நோட்டீஸ்சில் வேலி களை மட்டும் அகட்ட சொல்லிவிட்டு பிறகு 17 ஆம் தேதி வரையும் கால கெடு இருந்தும் 17ஆம் தேதி காலை 8 மணிக்கு வேலி அகற்றிவிட்டு அறிவிப்பு நோட்டீசை கட்டிடத்தை பற்றி எதுவுமே சொல்லாமல் சட்ட விரோதமாக கட்டிடத்தை இடித்தும் அதிலிருந்த பொருட்களை சேதப்படுத்தியும் மரம் செடி கொடிகள் அழித்தும்சுமார் சுமார் 50 லட்ச ரூபாய் இழப்பீடு ஏற்பத்தி இருக்கிறார்.

சமூக ஆர்வாலரிடம் கேட்ட போது, சம்மந்தமாக வழக்கு மதுரை உயர் நீதி மன்றத்திலும் வழக்கு எண் WP MD 17218/2023 மற்றும் பட்டுக்கோட்டை முன்சிப் கோர்டில் வழக்கு எண். OS 184/2023 வழக்கு நடந்துக்கொண்டு இருக்கிறது. ஆனால் எதிரிகள் எந்த நீதி மன்ற உத்தரவு இல்லாமல், நீதிமன்றத்தில் வழக்கு நடந்துக்கொண்டிருப்பதை தெரிந்துக்கொண்டு அவர்களாகவே நீதிபதிகளாகவும், கலெக்டராகவும் நினைத்துக்கொண்டு சட்ட விரோதமாக 50 வருட கட்டிடத்தை இடித்த RI தீபா மீதும் VAO ராஜாமாணிக்கம் மீதும் EB இணைப்பை சட்டவிரோதமாக துண்டித்த மணல் மாபியா கும்பல் மீதும் வழக்கு பதிவு செய்ய சொல்லி 09.10.2023 அன்று சென்னை அருகில் உள்ள வள்ளுவர் கோட்டம் என்ற இடத்தில் உண்ணாவிரதமும், 20.10.2023 அன்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் முன்பு தர்ணா ஆர்ப்பாட்டமும் நடைபெறும்.

மேலும் இது சம்மந்தமாக அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கை எடுக்காததற்காக தமிழ்நாட்டின் அனைத்து பொது மக்களுக்கும் கண்டன நோட்டீஸ் விநியோகம் செய்து நியாயம் கேட்கப்படும் என்று தெரிவித்துக்கொண்டார்.

- நிருபர்
தஞ்சாவூர் S. முகமது ஷரீஃப்

# மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் திருவருள் பேரவை இணைந்து நடத்திய 76 வது சுதந்திர தின விழா...



15.08.2023 செவ்வாய் கிழமை அன்று, நேரம் காலை 9:30 மணியளவில் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காமராஜர் பேருந்து நிலையம் அருகில் சிறப்பாய் நடைபெற்றது.

**இந்நிகழ்வில் தலைமை தாங்க வருகை தந்த:**

மௌலவி RNK. அபுஷாலிஹ் பாகவி

**முன்னிலை வகித்த:**

Dr. முருகேசன் சர்வதேச துணை தலைவர்,
R. ஷாம்எட்வர்ட் மாநில துணை செயலாளர்
அ. நசீர் நகர்மன்ற தலைவர், S ஜெயரஹர் மாவட்ட துணைச் செயலாளர் திருவருள் பேரவை
பிரதாப்சிங் மாவட்ட துணை செயலாளர்

**வரவேற்புரை நிகழ்த்திய:**

H ஹாஜா முஹ்யீத்தின்
மாவட்ட செய்தி தொடர்பாளர்

**வாழ்த்துரை வழங்கிய:**

V. ராதாகிருஷ்ணன்
நகரச் செயலாளர் திருவருள் பேரவை
P. நடராஜன் மாவட்டத் துணைத் தலைவர்
அ. ஆன்ஸ்லின்
பல் சமய உரையாடல் பணி குழு இயக்குனர்

**சிறப்புரையாற்றிய:**

மௌலவி M. மீர் காசிம் மைதானி
மாவட்ட தலைவர்
M. அப்துல் கரிம்
அமைப்பாளர் இஸ்லாமிய முன்னேற்ற சங்கம்

**கொடியேற்றி நலத்திட்டம் உதவிகளை துவக்கி வைப்பவர் வைத்த:**

ஜென்சன் J. ஜோசப் S/o Dr M. ஜெயஹர் ஜோசப்
தாளாளர் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி குளச்சல்

**நிகழ்ச்சி ஒருங்கிணைத்த:**

Dr. S. முகம்மது அலி
மாநிலத் துணைத் தலைவர்





இரு அமைப்புகளின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் சார்பாக நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்கணம்

மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் மனித உரிமைகள் மீட்பு மாத இருமுறை இதழ்

குமரி மாவட்டம்

- முதன்மை ஆசிரியர் தக்கலை Dr P. முருகேசன்




# பணம் இருந்தால் பொய் வழக்கு போடலாம்...

## நாகர்கோவில் பரபரப்பு

**நான் கடந்த ஆறு வருடங்களுக்கு முன்பு இருதயராஜ் என்பவரிடம் கார் டிரைவராக ஆறு வருடங்கள் பணிபுரிந்தேன்.**

அவர் திருட்டுத்தனமாக வாகனங்களை உடைத்து விற்பனை செய்து வந்தார். இதன் காரணமாக நான் அவரிடமிருந்து வேலையை விட்டு விலகினேன். அவருக்கு மூன்று மனைவிகள் இருந்ததால் அவருக்கு எப்பொழுதும் பிரச்சனைகள் இருந்து வந்தது. அவர்களுக்குள் தகவல்களை நான் தான் கூறியிருப்பேன் என்று சந்தேகப்பட்டு அதன் காரணமாக என்னிடம் அவர் கோபப்படுவது வாடிக்கையாக இருந்து வந்தது.

இந்நிலையில் அடியாட்களை வைத்து அவர் என்னை அடித்து காயப்படுத்தி நான் ஒரு ஐந்து நாள் கேரளாவில் கிம்ஸ் ஹாஸ்பிடலில் அட்மிட் ஆயிருந்தேன். பின்பு ஒரு பத்து நாட்கள் ஆசாரிப்பள்ளம் ஜி.எச் சில் அனுமதிக்கப்பட்டேன். இது சம்பந்தமாக வழக்கு இரணியல் கோர்ட்டில் நடந்து கொண்டிருந்தது. அப்போது பலமுறை பலரையும் வைத்து இந்த வழக்கை வாபஸ் வாங்க சொல்லி என்னை வற்புறுத்தி வந்தார். ஆனால் நான் வாபஸ் வாங்க முடியாது என்று மறுத்து விட்டேன்.

இதன் காரணமாக என்னை பழிவாங்க தக்க தருணத்தை பார்த்துக் கொண்டிருந்தார். இந்நிலையில் 14.07.2023அன்று விடியற்காலை ஐந்து மணிக்கு ஐந்து நபர்கள் கொண்ட குழு என் வீட்டிற்கு வந்து என்னை அவர்களுடன் வருமாறு கேட்டுக் கொண்டனர்.

நான் வர முடியாது என்று மறுத்ததும் அவர்கள் போலீஸ் எனக் கூறி வற்புறுத்தி என்னை அடித்து இழுத்து சென்றனர்.



என்னை எதற்காக அழைத்து வந்தனர் என்ற காரணத்தைக் கேட்டபோது காத்திருக்கும் படி சொன்னார்கள். பின்பு மாலை வரை என்னை வைத்திருந்து ஆசாரிபள்ளம் காவல் நிலையத்துக்கு கூட்டி சென்றனர். அங்கிருந்து எனக்கு மருத்துவ பரிசோதனை செய்ய அழைத்து சென்றனர் திரும்ப அதே காவல் நிலையத்துக்கு என்னை கூட்டி சென்று இரவு 9.00 மணிக்கு புன்னகைநகர்

# கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையின் இதயத்தில் இடம் பெற்ற இருதய ராஜன்



அதிகாலை 4.00 மணிக்கு நுள்ளி விளை ஊரில் வைத்து தூங்கிகொண்டிருந்த சகாய ஜெனிபர் என்பவரை தனிப்படை காவல்துறையின் உதவி ஆய்வாளர் ஆறுமுகம்அவர்களின்தலைமையில் வீட்டில் கைதுசெய்யப்பட்டு பிறகு வடசேரி புறநகர் காவல் நிலையத்தில் அதிகாலை 6.30 அழைத்து கொண்டு அங்கு வைத்து விசாரனை செய்து விட்டு பிறகு காலை 9.30 நேசமணி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கு ஒப்படைத்துவிட்டு தனிப் படை போலீசார்கள் சென்று விட்டார்கள். பிறகு நேசமணி காவல்துறை ஆய்வாளர் அவர்கள் ஆசாரி பள்ளம் காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு வழக்கு பதிவு செய்யுமாறு உதவி ஆய்வாளரை பார்த்து சொல்லிவிட்டு சென்று விட்டார்கள்.

நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்று நீதிபதி முன் நான் இருதய ராஜன் என்பவரை வெட்டியதாகவும் அவரை வெட்ட பயன்படுத்திய அரிவாள் இதோ இருக்கிறது என்று பக்கத்தில் உள்ள காவலர் ஒரு பையில் இருந்து எடுத்துக் காண்பித்தார். நான் உடனே இது எனக்கு தெரியாது இந்த சம்பவத்துக்கு எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை, என நீதிபதியிடம் முறையிட்டேன். ஆனால், அவர்கள் என்னை ரிமாண்ட் செய்து சிறைச்சாலையில் அடைத்தனர். என் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம் எனது தகப்பனார் மீன்பிடி தொழில் செய்கிறார்.



உதவி ஆய்வாளர் ஆசாரி பள்ளம் மேரி மெரிபா

எங்களுக்கு வருமானம் இல்லாத காரணத்தால், ஜாமினில் வெளிவர பொருளாதாரம் இல்லாத காரணத்தால் 42 நாட்கள் கழித்து ஜாமின் எடுக்க வேண்டிய சூழ்நிலை உருவானது. ஆனால், இது சம்பந்தமாக தற்போது பல தொழில்நுட்பம் வளர்ந்து விட்ட நிலையில் சம்பவம் நடந்ததாக கூறப்படும் அன்று நான் எங்கிருந்தேன் என்றும் அவர் எங்கிருந்தார் என்றும் சுலபமாக கண்டுபிடிக்க முடியும் ஆனால் அவரே கையில் சிறிய பிளேடு போன்ற ஆயுதத்தால் கீறிக்கொண்டு ஐபிசி307 பிரிவின் கீழ்காவல்துறையில் இருக்கும் சிலருக்குலஞ்சம் கொடுத்து சரியாக விசாரணை செய்யாமல் அவரது செல்வாக்கை பயன்படுத்தி வழக்கு சுமத்தி என்னை பழிவாங்கி இருக்கிறார்.



நேசமணி நகர் ஆய்வாளர் ஜெயலெஷ்மி

எனவே எனக்கு நீதி கிடைக்க பொதுநல அமைப்புகளும், பத்திரிகை துறையும் உதவி புரிய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் தெரிவித்தார். இதற்கு உடந்தையாக இருந்த காவல்துறையை சேர்ந்த கருப்பு ஆடுகளைகளை எடுக்க வேண்டும் என்றும் உயர் அதிகாரிகள் அவர்களை பணியிடை நீக்கம் செய்து நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றும், சாமானியனுக்கும், பணக்காரனுக்கும் இரண்டு நீதி இல்லை என்பதை சாத்தான்குளம் சம்பவம் போல் இல்லாமல் விரைந்து நடவடிக்கை எடுத்து நிரூபிக்க வேண்டும் என மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் சார்பாக காவல் துறையை கேட்டுக்கொள்கிறோம்.

**- தலைமை செய்தி ஆசிரியர் நாகர்கோயில் C. J. சுதர்மன்**




# லஞ்ச ஒழிப்புத்துறையா?

# இல்லை லஞ்சம் வாங்கும் துறையா?

**பெரம்பலூர் மாவட்டத்தில் கடை கோடி ஊரான அகரம் சீகூர் கிராமத்தில் VAO பிரகாஷ் என்பவர் துடிப்பான நேர்மையான இளைஞன் இவர் சமீபத்தில் டி.என்.பி.சி. எக்ஸாம் எழுதி பணியில் சேர்ந்தார். ஏழை, எளிய மக்களுக்கு முதியோர் உதவி தொகை, விதவை தொகை, .மாணவர்களுக்கான சான்றிதழ், சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்க எந்தவிதமான பணம் வாங்காமல் நேர்மையாக பணியாற்றினார்.**

மேலும், மக்கள் மனதில் இடமும் பிடித்தார். இவர் பறையர் சமூகத்தை சேர்ந்த இளைஞன் என்பதால் இவர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை பொய் வழக்கு போட்டுள்ளது. மேலும் இவர் டி.என்.பி.சி. குரூப் 2 எக்ஸாம் சமீபத்தில் எழுதி பாஸ் ஆகியுள்ளார். தாசில்தார் கோட்டாட்சியர் போன்ற பலவேறு பணிகளில் சேர பணி ஆணைக்காக ஆயத்தமாகி உள்ளார். இந்நிலையில், இவர் மீது பெரம்பலூர் மாவட்ட டிஎஸ்பி ஹேமசித்ரா லஞ்ச ஒழிப்பு துறையில் பணியாற்றி வருகிறார். இவர் பறையர்களின் மீது தொடர்ந்து பொய் வழக்கு போட்டு அவர்களை பழிவாங்கிக் கொண்டு வருகிறார். இந்த ஆண்டில் மட்டும் ஹேமசித்ரா டி.எஸ்.பி அவர்கள் நான்கு நபர்களை லஞ்ச ஒழிப்புத்துறை மூலம் கைது செய்து நடவடிக்கை எடுத்துள்ளார். இவர்களில் அனைவரும் பறையர்கள் என்பது குறிப்பிடத்தக்கது, கைது செய்யப்பட்ட அனைவரும் அரசு ஊழியர்கள் இவர்கள் ஆயிரம், இரண்டாயிரம் என்று சொற்ப பணங்களில் சிக்கியுள்ளார்கள்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் தேதி அன்று லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி ஹமசித்ரா இடம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பூர் ஆலத்தூர் வேப்பந்தட்டை போன்ற ஒன்றியங்களில் பணிபுரியும் BDO க்கள் பல்வேறு முறைகளில் ஈடுபட்டு உள்ளார் என்று கட்டுக்கட்டாக பல்வேறு ஆதாரங்களை அவர்கள் கையில் மக்கள் ஊழல்

தடுப்பு இயக்கம் சார்பாக பல்வேறு புகார் மனுகளையும் கொடுத்தோம். அத்தனை புகார் மனுகளும் பல கோடி ஊழல், போடாத ரோடு, வெட்டாத கிணறு, கட்டாத தடுப்பணைகள், எம் புக் ஊழல், 14வது மானிய குழு ஊழல், 15வது மானிய குழு ஊழல், BDO-களுக்கு வழங்கப்படும், வாகன எரிபொருள் முறைகேடு, பராமரிப்பு செய்யாமலே பராமரிப்பு செய்ததாக ஏழை எளிய மக்கள் படிக்கும் பள்ளிகூடத்தில் சுண்ணாம்பு மட்டும் அடித்து ஊழல், தொடக்கப்பள்ளி நடுநிலை பள்ளிகளுக்கு வழங்கப்படும் மேசை நாற்காலியில் ஊழல், ஒரு பள்ளிக்கூடத்தில் வழங்கிய மேசை நாற்காலி போட்டோ எடுத்து அடுத்தடுத்த பள்ளியில் அதே மாதிரி போட்டோ எடுத்து ஊழல், ஜல் ஜீவன் திட்டத்தில் ஊழல், ஆசிர்வாத் பைப் பதிலாக போலி ஆசிர்வாத் பைப் போட்டு 57 லட்சம் 47 லட்சம் என்று ஊருக்கு தகுந்தா மாதிரி பல்வேறு மோசடி நடைபெற்றது.

குப்பை கிடங்கில் ஊழல், உரக்கிடங்கில் ஊழல், கட்டாத கழிப்பறை கட்டியதாக ஊழல், வளர்க்கப்படாத சமூக நலகாடுகளை வளர்த்ததாக ஒரு கோடியே 30 லட்சம் ஊழல், இவ்வாறு பல்வேறு புகார்கள் அடிக்கி கொண்டே செல்லலாம் அத்தனை ஆதாரங்களும் கொடுத்தும் ஆளுங்கட்சிக்கு பயந்தும், மாவட்ட நிர்வாகத்திற்கு பயந்தும், அவர்கள் அனைவரும் பணக்காரர்கள் அமைச்சர் சப்போர்ட் உள்ளவர்கள் என்றும் எந்தவித நடவடிக்கை எடுக்காத டிஎஸ்பி ஹேமசித்ரா. VAO பிரகாஷ் மீது மட்டும் நடவடிக்கை எடுத்தது ஏன்?.



நேர்மையான அகரம் சீகூர்
கிராம நிர்வாக அலுவலர்
பிரகாஷ்

ஏனென்றால், அவர் ஒரு ஏழை கேட்க யாரும் இல்லாத ஒரு அப்பாவி, தந்தை இல்லாத தாயின் சொற்ப பணத்தில் நன்றாக படித்து பணம் கொடுத்து வேலைக்கு வராமல் நேர்மையாக முறைப்படி தேர்வு எழுதி பணியில் சேர்ந்த நேர்மையான இளைஞர். வளர்ச்சி பிடிக்காமலும் லஞ்சம் வழக்கில் கைது செய்துள்ளனர்.

மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படி லஞ்ச ஒழிக்க கைதானவர்களுக்கு ஆதரவான செய்திகளை வெளியிடுகிறோம் என்று யாரும் தவறாக நினைக்க வேண்டாம். எங்களுடைய கொள்கையையும் அரசு ஊழியர்கள் மக்களுக்கு செய்யும் சேவைகளில் எந்த ஒரு லஞ்சமும் பெறக் கூடாது என்பது தான் எங்களுடைய கோரிக்கையும், ஆனால் ஏழை அரசு ஊழியர்களுக்கு ஒரு நியாயமும், பணக்கார வசதியான அரசு ஊழியர்களுக்கு ஒரு நியாயமும், அமைச்சர் செல்வாக்கு உள்ள அரசு ஊழியர்களுக்கு ஒரு நியாயமும், மேல் சாதி, கீழ் சாதி என்று சாதி பார்க்காமல் தவறு செய்தால் அனைத்து அதிகாரிகளும் தண்டிக்கப்படுவார்கள் என்ற உணர்வுகளை என்னத்தையும் விதைக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

பிரகாஷ் VAO அவர்கள் தற்போது பெரம்பலூர் சப் ஜெயிலில் உள்ளார், அங்கு அவரை மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சார்பாக பேட்டி எடுத்தோம் பல்வேறு உண்மைகளை கண்ணீர் மல்க கூறினார். நாங்கள் விசாரித்தவரை அவர் ஊழல் செய்யவில்லை என்றும், நான் பணம் வாங்கியது உண்மை என்றும், ஆனால் அந்த பணம் லஞ்சப் பணம் இல்லை என்றும், நானும் என் மீது புகார் கொடுத்தவரும் ஒரே தெருவில் திட்டக்குடியில் வசித்து வருகிறோம்.

அந்த அடிப்படையில் அவர் என்னிடம் பத்தாயிரம் ரூபாய் கடன் பெற்றுள்ளார் என்னிடம் வாங்கிய பணத்தை கொடுக்க வருகிறார் என்று நினைத்து தான் நான் அந்த பணத்தை வாங்கினேன். பிறகு தான் தெரியும் டிஎஸ்பி ஹேமசித்ரா சதி(சாதி)வலையில் மாட்டிக்கொண்டேன். அன்று நடந்தது என்ன என்று இதுவரை எனக்கு புரியவில்லை என்றார்.

**பொறுத்திருங்கள் அவர் ஜாமினில் வெளியே வரும்போது பல்வேறு உண்மைகள் வெளிவரும் அடுத்த இதழில் தொடரும்...**

- பொறுப்பாசிரியர் பெரம்பலூர் M. இளவரசன்

# உசுப்பி ஏற்றிய நடிகை ரோஜா அவசரப்பட்ட ஆந்திரா முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி



# சந்திரபாபு நாயுடு கைதை கண்டித்து நடந்த முழுஅடைப்பு

**சந்திரபாபு நாயுடு கைதை கண்டித்து ஆந்திராவில் நடந்த முழுஅடைப்பு அமைதியாக முடிந்தது. பஸ்கள் ஓடவில்லை அலுவலகங்கள் இயங்கவில்லை விஜயவாடா, ஆந்திர மாநில முன்னாள் முதல்மந்திரியும், தெலுங்கு தேசம் கட்சி தலைவருமான சந்திரபாபு நாயுடு கடந்த சனிக்கிழமை, சுமார் ரூ.300 கோடி ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டார்.**

பிறகு அவரை 14 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்க விஜயவாடா கோர்ட்டு உத்தரவிட்டது. அதைத்தொடர்ந்து, அவரை கிழக்கு கோதாவரி மாவட்ட தலைநகர் ராஜமுந்திரியில் (ராஜமகேந்திரவரம்) உள்ள மத்திய சிறையில் அடைக்க முடிவு செய்யப்பட்டது. அதற்காக விஜயவாடாவில் இருந்து 200 கி.மீ. தூரம் சாலை மார்க்கமாக சந்திரபாபு நாயுடுவை அழைத்துச் சென்றனர்.

போலீஸ் வேன், மூலம் ராஜமுந்திரி சிறையை அடைந்தது. சிறைவாயில் வரை சந்திரபாபு நாயுடுவின் மகனும், தெலுங்கு தேசம் கட்சி பொதுச்செயலாளருமான நர லோகேஷ், காரில் பின்தொடர்ந்தார். சிறிது நேரம் காத்திருந்து



விட்டு அவர் திரும்பினார். அந்தமானில் நிலநடுக்கம்: ரிக்டரில் 4.4 ஆக பதிவு சந்திரபாபு நாயுடுவை அதிகாரிகள் சிறைக்குள் அழைத்துச் சென்றனர். அவரது உயிருக்கான அச்சுறுத்தலை கருதி, தனியாக உள்ள 'சினேகா' என்ற பிளாக்கில் அவரை அடைத்தனர். 5 மாநில தேர்தல் அறிவிப்பு அடுத்த மாதம் வெளியாக வாய்ப்பு முன்னேற்பாடுகளில் தேர்தல் கமிஷன் தீவிரம் அவருக்கு '7691' என்ற கைதி எண் ஒதுக்கப்பட்டது. அவருக்கு சிறப்பு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒரு தனி உதவியாளரும், 5 பாதுகாவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 300 போலீசார் பாதுகாப்பு வீட்டு உணவும், மருந்துகளும் அளிக்க கோர்ட்டு அனுமதி அளித்துள்ளது. சந்திரபாபு நாயுடுவை அவருடைய மனைவி புவனேஸ்வரி, மகன் நர லோகேஷ், மருமகள் பிராமினி ஆகியோர் சந்தித்தனர். பால் கலக்காத காபி, பழ சாலட், வெந்நீர் ஆகியவற்றை அளித்தனர். சந்திரபாபு நாயுடு அடைக்கப்பட்டதால், ராஜமுந்திரி சிறையை சுற்றிலும் சட்டம்ஒழுங்கை பராமரிக்க 300 போலீசார் நிறுத்தப்பட்டுள்ளனர். ராஜமுந்திரி நகரில் போலீஸ் சட்டத்தின் 30வது பிரிவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.





முழுஅடைப்பு சந்திரபாபு நாயுடு கைதை கண்டித்து தெலுங்கு தேசம் கட்சி நேற்று முழுஅடைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது. அதற்கு நடிகர் பவன் கல்யாண் தலைமையிலான ஜன சேனாவும், கம்யூனிஸ்டு கட்சிகளும் ஆதரவு தெரிவித்தன. ஆனால், பா.ஜனதா ஆதரவு தெரிவிக்கவில்லை. முழுஅடைப்பை முறியடிப்பதற்காக, தெலுங்கு தேசம் கட்சி மூத்த தலைவர்கள் அனைவரும் முன்னெச்சரிக்கையாககைதுசெய்யப்பட்டனர். கட்சியின் மாநில தலைவர் கே.அச்சாநாயுடு உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். சில மூத்த தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். பஸ்கள் ஓடின பல இடங்களில் தெலுங்கு தேசம் தொண்டர்கள் சாலைமறியலில் ஈடுபட்டனர். நரசன்னபேட்டையில் தேசிய நெடுஞ்சாலையில் டயர்களை எரித்து தர்ணாவில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் அப்புறப்படுத்தினர். ஆந்திரபிரதேச அரசு போக்குவரத்து கழக பஸ்கள், முதலில் இயக்கப்படவில்லை பின்னர், வழக்கம்போல் இயக்கப்பட்டன. தனியார் வாகனங்களும் வழக்கம்போல் ஓடின. அரசு அலுவலகங்கள், அரசு கல்லூரிகள், அரசு பள்ளிகள் எப்போதும் போல் செயல்பட்டன. ஆந்திர பல்கலைக்கழகமும், அதனுடன் இணைந்த கல்லூரிகளும்இயங்கவில்லை. சில தனியார் பள்ளிகள் மட்டும் விடுமுறை அறிவித்து இருந்தன. பொதுத்துறை வங்கிகள், வழக்கம்போல் இயங்கவில்லை அசம்பாவிதம் நடந்தன ஆந்திராவின் பெரிய நகரான விசாகப்பட்டினத்தில் முழுஅடைப்பு வர்த்தக நிறுவனங்கள் திறக்கவில்லை இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுமுழுஅடைப்பு அமைதியாக நடந்து முடிந்தது. இதுபற்றி கூடுதல் போலீஸ் டி.ஜி.பி. சங்கா பிரதா பாக்சி நமது ஆசிரியர்

G. வெங்கடேசன் கூரியதாவது: நிலைமை அமைதியாக இருந்தது. எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. சூழ்நிலைக்கேற்ப உள்ளூர் அதிகாரிகள் தடை உத்தரவு பிறப்பித்தனர். என்றார்.

- சிறப்பு செய்தி ஆசிரியர் வாணியம்பாடி G. வெங்கடேசன்

# பாசிச பயங்கரவாதத்தின் உச்சமாக செயல்படுகிறது ஆர்.எஸ்.எஸ்ன் பாசிச பாசக:

**வீரத்தமிழர் கட்சியின் நிறுவனத்தலைவர் டாக்டர் சிலம்பரசன் குற்றச்சாட்டு**

**ஆகஸ்ட் 15 சுதந்திர தின உரையில் ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் அறிவிக்கப்பட்ட, விஸ்வகர்மா யோஜனா திட்டம் என்ற குலக்கல்வி திட்டத்தை ஆளும் மோடி அரசு செப்டம்பர் 17 அமலுக்குக் கொண்டு வந்திருக்கிறது..**

இந்த விஸ்வகர்மா யோஜனா திட்டம் என்பது, பாரம்பரிய கைவினைத்திறனில் திறமையான தனிநபர்களை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னோடி திட்டமென்றும், குறிப்பாக, பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) சமூகத்திலுள்ள, தெய்வீக கட்டிடக் கலைஞர் மற்றும் கைவினைஞர் விஸ்வகர்மாவின் பெயரால் பெயரிடப்பட்ட இந்தத் திட்டம், பல்வேறு கைவினைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்குள் திறன்களைக் கடத்தும் ஆசிரியர் மாணவர் பாரம்பரியத்தை (குரு சிஷ்ய பரம்பரை) பாதுகாக்கவும், மேம்படுத்தவும் முயல்கிறது என்பதாக சொல்லப்படுகிறது...

இதை தான் நாம் குலக்கல்வி முறை என்று அழைக்கிறோம்..

விஸ்வகர்மா திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களுக்கு நிவி விஸ்வகர்மா சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கப்பட்டு, 5% சலுகை வட்டி விகிதத்தில் 1 லட்சம் (முதல் தவணை) மற்றும் 2 லட்சம் (இரண்டாம் தவணை) வரை பிணையமில்லாத கடன் கொடுப்பதாக சொல்கிறார்கள்...



மேலும், இந்த விஸ்வகர்மா யோஜனா திட்டத்திற்கு 2023-2024 முதல் 2027-2028 வரையிலான ஐந்து நிதியாண்டுகளுக்கு 13,000 கோடி முதல் 15,000 கோடி வரை பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நாம் அறிகிறோம்.

இத்திட்டத்தில் திறன் பயிற்சிக்கு ரூ.500 மற்றும் நவீன கருவிகள் வாங்க ரூ.1,500 உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள்...

இந்த திட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் 18 பாரம்பரிய வர்த்தகத் தொழில்களை உள்ளடக்கியிருக்கிறதாம்...

தச்சர்கள், படகு தயாரிப்பாளர்கள், கொல்லர்கள், குயவர்கள், சிற்பிகள், செருப்புத் தொழிலாளர்கள், தூய்மை பணியாளர்கள், தையல்காரர்கள் என்று ஒரு நீண்ட பட்டியல் நீள்கிறது..

உண்மையில் மோடி அரசுக்கு திராணியிருந்தால் மருத்துவக்கல்வியை இலவசமாக்கட்டும். முடியுமா?

குலக்கல்விக்கு பல ஆயிரம் கோடிகளை ஒதுக்கிய ஒன்றிய அரசு, மருத்துவக்கல்வியை இலவசமாக்க சில ஆயிரம் கோடியை ஒதுக்கலாமே!!!

இதிலிருந்து நமக்கு புலப்படும் செய்தி என்ன?

நுட்பமாக கவனித்தோமென்றால்,

1953ஆண்டு அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சராகஇருந்தஇராஜகோபாலாச்சாரி (இராஜாஜி) அவர்களால் கொண்டுவரப்பட்ட குலக்கல்வி முறைக்கு தற்போதைய ஒன்றிய பிரதம அமைச்சர் நரேந்திர மோடி அவர்கள் "விஸ்வகர்மா யோஜனா திட்டம்" என்று பெயர் சூட்டியுள்ளார்...

எதிர்வரும் 2024ஆண்டில் ஆர்.எஸ்.எஸ் இயக்கம் 100ஆண்டை நிறைவு செய்கிறது..

ஒரு கொடுங்கோல் கட்டமைப்பைக் கொண்ட இந்துப் பாசிச அமைப்பாக, ஆர்.எஸ்.எஸ் அதன் தொடக்கத்திலிருந்தே இசுலாமிய வெறுப்பு, கிறித்தவ எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு, தலித் எதிர்ப்பு, பெண்ணுரிமை எதிர்ப்பு உடையதாக இருக்கிறது. தனது நோக்கங்களை அடைவதற்கு எந்த பெரிய வன்முறையையும் எளிதாக கையாளும், கட்டவிழ்த்து விடும் பழக்கம் அதற்கு இருந்து வருகிறது.

அரசியலமைப்பு சபையானது, இந்திய அரசியலமைப்பை உருவாக்கும்போது, ஆர்.எஸ்.எஸ் அந்த அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ள மறுத்ததோடு, கடுமையாக எதிர்க்கவும் செய்தது. அதற்கு பதிலாக 'மனுஸ்மிருதி' யை அரசியலமைப்பு சட்டமாக்க வேண்டுமென்று பரிந்துரைத்தது.

1947 ஆகஸ்ட் மாதம் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் 'ஆர்கனைசர்' இதழ் அம்பேத்கரின் தலைமையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்பதற்கு ஆட்சேபனை தெரிவித்ததுடன், மூவர்ண தேசியக் கொடியையும் எதிர்த்தது.

உயர்சாதியினரின் நலனுக்கு எதிராக அனைத்து சாதியினருக்கும் சம உரிமை வழங்கும் 1950ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பையும் கடுமையாக எதிர்த்தது.

இந்திய விடுதலை போராட்டத்தில் ஒடி ஒழிந்துக்கொண்டவர்கள்,ஏற்றுத்தாழ்வுகளுக்கு ஊன்றுகோலாய் நின்று ஊக்கமளித்தவர்கள், சாதி, மத கட்டமைப்பை கட்டிக்காத்தவர்கள், இந்திய அரசியலமைப்பையும்,மூவர்ண தேசியக் கொடியையும் நிராகரித்தவர்கள் தான் இன்று தங்களை தேசபக்தர்களாக காட்டிக்கொண்டு, நரிவேடமிட்டு நடித்துக்கொண்டிருக்கின்றனர்.

வரலாற்றுரீதியாக இந்திய ஒன்றியம் என்பது பல மதங்கள், பல மரபினங்கள், பன்முக பண்பாடுகள், பல்வேறு மொழிவழி தேசிய இனங்களை உள்ளடக்கியதாக இருந்து வருகிறது. மனிதநேயமற்ற சாதியமைப்பானது இந்த அனைத்து அடையாளங்களையும் சிதைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்..

மேலும், ஆரியப் பார்ப்பன ஆர்.எஸ். எஸ்ன் 100ஆம் ஆண்டு நிறைவில் இந்திய ஒன்றியம் இந்து ராட்டிரம் என்றே அழைக்கப்படும்..

இந்தி, இந்து, இந்து ராட்டிரம், என்பது தான் ஆர்.எஸ்.எஸ்ன் லட்சியவெறிகளில் முக்கியமான ஒன்று.

இப்பெருங்கனவிற்கான முன்னோட்டம் தான் இந்தியாவை "பாரத்" என்று அழைக்கத் தொடங்கியிருப்பது, 3 விழுக்காடு பிராமணர்களுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கியிருப்பது, இந்திய ஒன்றிய நீதித்துறையில் இந்தியை திணித்திருப்பது..

மாநில பட்டியலில் இருக்கவேண்டிய கல்வியை பொதுப்பட்டியலில் வைத்துக்கொள்வதும், ஏழை எளிய மக்களுக்கு உயர்கல்வியை எட்டாத வண்ணம் இருக்க வேண்டுமென்று, நீட் தேர்வு விலக்கு மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்க மறுத்திருப்பது, தமிழ்நாட்டில் வட இந்திய தொழிலாளர்களின் ஆதிக்கத்தை அதிகரித்திருப்பது, ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே அடையாளம், ஒரே ரேசன், ஒரே தேர்தல் என எதேச்சாதிகார ஒற்றை ஆட்சி முறையின் கீழ் சர்வாதிகார அடிமை ஆட்சி முறையை நிறுவ தீவிரம் காட்டி வருகிறது...

சுருக்கமாக சொல்லப்போனால் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், ஆட்சி

அதிகாரத்திலும் பிராமணர்களின் ஆதிக்கம் மேலோங்க செய்வதற்காகவே ஆளும் பாரதீய சனதாக் கட்சி முனைப்புக் காட்டி வருகிறது...

அன்று,

2000ல் குஜராத்தின் முதலமைச்சராக இருந்த மோடி அவர்கள் 3000த்திற்கும் மேற்பட்ட அப்பாவி இசுலாமியர்களை படுகொலை செய்து தான் பிரதம வேட்பாளர் தகுதியை பெற்றார்..

இன்று

2023ல் மணிப்பூரில் அப்பாவி குக்கி இன பழங்குடிகளின் மீது வன்முறையை கட்டவிழ்த்து, மிகப்பெரும் மனித உரிமை அத்துமீறலையும், அநீதியையும் இழைத்து 300க்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இதுவரை தமிழ்நாட்டில் மட்டும் 16 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் நீட் தேர்வால் தற்கொலை செய்து மாண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு உரிய நீதியை பெற்றுக்கொடுக்காத மோடி அரசு,

இந்தியாவை ஏழை நாடுகளின் பட்டியலில் தள்ளிவிட்டுவிட்டு வல்லரசு நாடென்று பிதற்றிக் கொள்ளும் மோடி அரசு, தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட 21 க்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காத பாசிச பயங்கரவாத மோடி அரசு கலைக்கப்பட வேண்டும்..

எதிர்வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் சாதி, மத, இன, வர்க்க, கட்சிகள் பாகுபாடின்றி ஒற்றைக் கருத்தில் ஒன்றிணைந்து, ஒரு குடையின் கீழ் அணிதிரண்டுபாரா(தீய) சனதா கட்சிக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்பட வேண்டும் என்பதை பொதுமக்களுக்கு பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்...

தொடர்ந்து மக்கள் மீது திணித்து வரும் மோசக்கார சட்டங்களையும், நாசக்கார திட்டங்களையும் வீரத்தமிழர் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது...

- தொகுப்பாசிரியர் வேலூர் M. ராமச்சந்திரன்

## கன்னியாகுமரி மாவட்ட ஆம்புலன்ஸ் சேவைக்காக நிதி உதவி




மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் சார்பாக கன்னியாகுமரி மாவட்டத்திற்காக ஆம்புலன்ஸ் வாங்குவதற்கு மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் மாநில துணைத்தலைவரும் மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கையில் ஆசிரியரும் Dr S. முகமது அலி அவர்கள் 50,000 ஐம்பதாயிரம் காசோலைக்கு சர்வதேச செயல் தலைவர் டாக்டர் முருகேசன் மற்றும் மாநில தலைமைச் செயலாளர் டாக்டர் சாம் எட்வர்ட் ஆகிய இருவரிடமும் 18.09.2023 மாலை 3 மணிக்கு மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் மாவட்ட அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது மேற்படி நிதி மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தில் வங்கி கணக்கில் சேர்க்கப்பட்டது.

## ராமநாதபுரம் மாவட்ட ஆம்புலன்ஸ் சேவைக்காக நிதி உதவி



மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் சார்பாக ராமநாதபுரம் மாவட்டத்திற்காக ஆம்புலன்ஸ் வாங்குவதற்கு மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் மாவட்ட தலைவரும் மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கையில் நிருபர் தாமரைக்கனி அவர்கள் 40,000 நாற்பது ஆயிரம் ரூபாய் காசோலைகள் மாநில பொருளாளர் R M ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட செயலாளர் S பதர் நிஷா பேகம் ஆகிய இருவரிடமும் மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் மாவட்ட அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது மேற்படி நிதி மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தில் வங்கி கணக்கில் சேர்க்கப்பட்டது.

**Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN**











# குளோபல் ஆக்டிவ்ஸ் கவுன்சில் கௌரவ டாக்டர் பட்டம்!

## சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளால் வழங்கப்பட்டது...

மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் S. ஆல்பெட் பிரான்சிஸ் சேவியர்.பெர்லின் எல்த் கேர்.(ஆயுர் வேதா மெடிஷன் கம்பனி) மேனேஜர் அவர்களுக்கும் மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் மாநில தலைமைச் செயலாளர் சாம் எட்வர்ட் அவர்களுக்கும் குளோபல் ஆக்டிவ்ஸ் கவுன்சில் கௌரவ டாக்டர் பட்டம் பாண்டிச்சேரி ஓட்டல் விய் பார்க்க வில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளால் வழங்கப்பட்டது.

பிறகு சிறப்பு விருந்தினராக மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் மாநில துணைத்தலைவர் டாக்டர் முகமது அலி அவர்களுக்கும் மக்கள் உழல் தடுப்பு இயக்கத்தின் கிருஷ்ணகிரி மாநில தலைமை செயலாளர் எம். ஜெய்பிரசாத் அவர்களுக்கும் உயர் நீதிமன்ற நீதிபதிகளால் கௌரவிக்கபட்டார்கள். இது சம்பந்தமாக மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தினர் மற்றும் மனித உரிமை மீட்பு பத்திரிக்கை மற்றும் டிவி சேனல் குடும்பம் சார்பாக வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

- நிர்வாக ஆசிரியர் சூளகிரி A. கேம்ராஜ்

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17

# மரணமே... என்னை பிடிக்கவில்லையா ?

வாழ்க்கை என்னவென்று
அறிந்த பருவத்திலிருந்து
எவ்வளவோ வலிகள்....

ஆசைகள் கனவாகவே
கலைந்தது...

சொல்லமுடியாத
ஏமாற்றங்களும்
வலிகளும் வேதனைகளும்
துக்கங்களும் காயங்களும்
என்னுள் உண்டு....

நம்பிய எல்லாமே
ஏமாற்றம்,
நம்பிக்கை
துரோகம்....

ஏன் இந்த
வாழ்க்கை
வேண்டவே
வேண்டாம்....

மரணமே நீயாவது
எனக்கு
உண்மையாக இரு...
நான் மரணத்திற்கு பயந்து கொண்டு
உன்னிடம் பேசவில்லை
என் காதலுக்கு
காதலி கிடைக்க வேண்டும்
என்பதற்க்காக............

மரணம் என்பது அனைவருக்கும்
வரும்
அதுவும் ஒரு நாள் மட்டும்
தான் வரும் ஆனால் எனக்கு
மட்டும் தான் தினம் தினம்
வருகின்றது!
உன் நினைவுகளால் ......

மரணம் கூட ஒரு சில
நொடிகளில் கொன்று
விடும் ஆனால் உன்
நினைவுகள் என்னை
ஒவ்வொரு நொடியும்
கொல்கிறது.

என் மரண தருணத்தில்
கூட என் எதிரியின் முன்பும்
துரோகியின் முன்பும்
நீ அழாதே
அவர்களுக்கு தேவை
என் மரணம் அல்ல
உன் அழுகை தான்.

உன் நினைவுகளையும்
உன் உறவுகளையும் மறக்க
மருந்து தேடுகிறேன்
இறுதியில் மரணமே
விடையாக வருகின்றது.

உண்மையாக பாசமும்
உன்னால்
மரண வலி
மட்டுமே எனக்கு
பரிசாக
கிடைக்கின்றது.

நான் மரணம் என்றால்
நான் பயந்து விடுகிறேன்
நான் இறந்து விடுவேன்
என்பதற்காக அல்ல

உன்னை பிரிந்து
விடுவேன் என்பதற்காக..!
மரணம் இல்லாமல்
வாழ ஆசை தான்
இந்த
உலகில் அல்ல !

உன் நினைவுகள் போதும்
என்று தான் வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்
ஆனால்
சில காயங்களும்
நினைவுகளையும் மறப்பதற்கு
மரணம் எனும் படுக்கையில்
ஏறினால் தான் முடியும் போல..!

நான் வெறுத்து ஒதுக்குபவர்கள்
நம் மீது உயிரே வைத்திருக்கார்கள்
என்று இப்போது
தெரிய வரும் போது
அது
மரண வலியை விட பெரிய
வலிகளை இருக்கிறது

இப்போது
காத்திருக்கிறேன்
மரணமே நீ என்னை
அழைத்து செல்ல
வருவாய் என்று....

எத்தனை முறை
உன்னை தொட்டு
சென்றேன்...

உனக்கும் என்னை
பிடிக்கிவில்லையோ...

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000